விலை சதம் 25 Registered as a Newspaper in Sri Lanka

# ஈழநாடு

மலர் 16 Thel Eelanaadu இதழ்: 155

ஆனந்த ஆடி 2 ஜ. ஆகிர் 27 வியாழக்கிழமை 18-7-74

## யாழ். பஸ் நிலையத்தில் பொலிசார் அரிசி வேட்டை

யாழ்ப்பாணம், வியாழன்

பல்களில் யாழ்ப்பாணம் பஸ் நிலையம் கொண்டுவரப்படும் அரிசி முடிச்சுக்கள் யாவும் தினமும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்படுகிறது. கடந்த சில தினங்களாக பொலிசார் இவ்வேட்டையில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

யாழ். பஸ்நிலையம் வந்தடையும் நெடுந்தூர பஸ்களுக்கு விரைந்து செல்லும் பொலிசார் அவற்றில கொண்டுவரப்படும் அரிசி முடிச்சுகளுடன் சம்பந்தப்பட்டவர்களை பொலிஸ் நிலையம் கொண்டுசெல்வதைத் தினம் காணக்கூடியதாகவுள்ளது.

அத்துடன் சைக்கிள்களில் அரிசி முடிச்சுகளைக் கொண்டு செல்பவர்களையும் பொலிசார் பொலிஸ் நிலையம் கொண்டுசெல்கின்றனர். ரயில்களிலும் இது போன்ற திடீர் வேட்டைகள் நடைபெறுகின்றனர்.

இதுபற்றி தெல்சந்தைப் பகுதி யாழ்ப்பாண அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது ஓர் இடத்திலிருந்து இன்னுமொரு இடத்துக்கு அரிசியைக் கொண்டுசெல்லத் தடை உள்ளதாகவும் இச்சட்டத்தின் கீழ் பொலிசார் அரிசியைப் பறிமுதல் செய்து வருவதாகவும் கூறினார். இதுவரை எவ்வளவு அரிசி மேல் சந்தைப்படுத்தும் சபையிடம் பொலிசாரால் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று நாம் கேட்டபோது, மிகக்குறைவான தொகைதான் என்று அவர் சொன்னார். (ஈ)

# பட்டிருப்பு எம். பியும் கட்சிமாறினார்!

### அமிரின் 48-வது பிறந்ததினம்

யாழ்ப்பாணம், வியா.

தமிழரசுக்கட்சியின் தலைவரும் தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கத்தின் 48-வது பிறந்ததினத்தை அடுத்தமாதம் 26-ம் திகதி சிறப்பாகக் கொண்டாட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அந்த விழாவில் திரு. அமிர்தலிங்கத்தின் வாழ்க்கை வரலாறு கொண்ட "தமிழமுதம்" என்ற நூல் வெளியிடப்படுமென்றும் கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## வேறுசில எம். பிக்களும் ஆளும்கட்சியில் சேரலாம்

கொழும்பு, புதன்

ஐக்கிய தேசியக்கட்சியைச்சேர்ந்த பட்டிருப்புத் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு எஸ். யூ. தம்பிராஜா இன்று ஆளும் கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்து கொண்டார்.

முன்னாள் பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். யூ. எதிர்மன்னசிங்கத்தின் சகோதரரான திரு. தம்பிராஜா ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டு தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. எஸ். எம். இராசமாணிக்கத்தைத் தோற்கடித்தார். பின்னர் தமிழர் கூட்டணி உருவான சமயத்தில் அதனுடனும் சிறிதுகாலம் ஒத்துழைத்து வந்தார். இன்று அவர் ஐக்கியதேசியக்கட்சியை விட்டுவிலகி சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்து கொண்டார்.

பிரதம மந்திரிக்கு எழுதியுள்ள கடிதம்ஒன்றில் தமது தொகுதியில் அரசின் சோஷலிச நடவடிக்கைகள் பயனளித்து வருவதை உணர்ந்து சோஷலிசத் திட்டங்களை மேலும் வெற்றிபெற ஒத்துழைக்க தாம் விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

### நல்லூர் எம். பி.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ்க் காங்கிரஸ் (முற்போக்கு) தலைவர் திரு. சி. அருளம்பலமும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்து கொண்டதாகத் தெரியவருகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

## "தமிழரசு எம். பி. க்கள் கட்சி மாறமாட்டார்கள்"

### அமிர்தலிங்கம் அறிக்கை

கொழும்பு, புதன்

தமிழரசுக் கட்சியிலிருந்து தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்கள் எவரும் அரசாங்கத்தில் சேரமாட்டார்கள் என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பேரவை உறுப்பினர்கள் எல்லாருடனும் தனித்தனியே தாம் பேச்சு நடத்திய பின்னரே இந்த அறிக்கையை விடுவதாகத் தெரிவித்துள்ள அவர் மட்டக்களப்பு எம். பி. திரு. இராஜதுரை அவரது இனத்தில் அன்னையின் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் அரசாங்கத்தில் சேர்வதுபற்றி அவர் ஆலோசிக்கவில்லையென்பதை தாம் திட்டவட்டமாக அறிவதாகவும் கிழக்கு மாகாண நிலைமைபற்றி திரு. ராஜதுரை தெரிவித்துள்ள விஷயங்கள் குறித்து விரைவில் மீண்டும் அவரது இனத்தில் ஒருகூட்டம் நடத்தி தாங்கள் ஆலோசிக்கவிருப்பதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

## கச்சதீவில் விரைவில் எண்ணெய் ஆராய்ச்சி

### பிரதமர் தகவல்

கொழும்பு, புதன்

"கச்சதீவில் விரைவில் எண்ணெய் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படவுள்ளது".

இத்தகவலை பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தமது தேர்தல் தொகுதியான அத்தனகல்லையிலுள்ள யட்டியானை என்னுமிடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் வெளியிட்டார்.

பிரதமர் இங்குதொடர்ந்து பேசுகையில், கச்சதீவை இலங்கைக்கே சொந்தமாகக் கொண்டதில் இலங்கை பெரும் வெற்றியீட்டியுள்ளது. கச்சதீவை மட்டுமல்ல அத்தீவிலிருந்து அரை மைல் தூரம்வரையான கடற்பிராந்தியமும் இலங்கைக்கே உரியது என்று இந்தியா அங்கீகரித்துள்ளது" என்றார்.

தற்போது நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் எண்ணெய் ஆராய்ச்சி நடவடிக்கைகளை இலங்கையின் கரையோரப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும், இதன்படி கச்சதீவிலும் விரைவில் எண்ணெய் ஆராய்ச்சி ஆரம்பமாகும் என்றும் பிரதமர் தெரிவித்தார். (சிபிஏ — ஈ)

## மாவை தேர், தீர்த்தம் விசேஷ பஸ் சேவைகள்

யாழ்ப்பாணம், வியாழன்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவத்தை முன்னிட்டு நேற்றிரவு முதல் விசேஷ பஸ் சேவைகள் நடைபெறுகின்றன.

தேர்த்திருவிழாவான இன்றும், தீர்த்த உற்சவமான நாளையதினம் இரவு பகலாக விசேஷ பஸ் சேவைகளை நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வழமைபோல் பெருந்திரளான யாத்திரிகர்கள் மாவிட்டபுரத்தில் இன்றும், நாளையும் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஈ)

## மலைக் குகைகளில் மக்காரியஸ் ஒளித்திருந்தார்

லண்டன், ஜுலை, 17

சைப்பிரஸின் புரட்சிவாதிகள் தமது மாளிகையைத் தாக்கியபோது இரகசியமாகத் தப்பிச்சென்று மலைக்குகையொன்றில் ஒளிந்திருந்ததாக அதிபர் ஆர்ச் பிஷப் மக்காரியஸ் இன்று லண்டனில் கூறினார்.

ஆர்ச் பிஷப் மக்காரியஸ் ஐ. நா. செல்லும் வழியில் இன்று லண்டன் வந்துசேர்ந்தார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற சைப்பிரஸின் புரட்சியின்போது தான் தப்பியவிதத்தை லண்டனில் மக்காரியஸ் தெரிவித்துள்ளார்.

கிரேக்க அதிகாரிகள் மிகவும் மிருகத்தனமாக நடந்ததாகவும் நாட்டைப் பிடிப்பதிலும் பார்க்க என்னைக் கொன்றுவிடுவதுதான் அவர்களது குறிக்கோளாக இருந்ததாகவும் கூறிய அவர் தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து தனது மாளிகையிலிருந்து வெளியேறித்தனது பிறந்த ஊரான பப்போஸுக்குச் சென்று அங்கு மலைக்குகைகளில் பதுங்கியிருந்ததாகவும் பின்னர் பப்போஸ் சுதந்திர வானொலி நிலையம்மூலம் அறிக்கைவிட்டார்.

(4ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு
தலைமன்னார் ஏஜன்ட்
எம். முகம்மது ஹலீம்
பைஸல் ஸ்ரோர்ஸ்
தலைமன்னார் பியர்

# திடீர்ப் பொதுத் தேர்தல்! நவம்பரில் நடக்குமா?

கொழும்பு, புதன்

இலங்கையில் திடீர்ப் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறலாம் என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் இருக்கின்ற ... இப்போதைக்குப் பொதுத் தேர்தல் வைக்கவேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு இல்லை. சில அமைச்சர்களும் கூடத் தேர்தல் இப்போது அவசியமில்லையென்று கருத்து வெளியிட்டு வந்துள்ளனர். 1972ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்பு இந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்தை மேலும் இரண்டு வருடத்திற்கு நீடித்தது.

ஆனால் இப்போது எதிர்க்கட்சியில் தோன்றியுள்ள முரண்பாடுகளையும் கருத்து வேறுபாடுகளையும் கருத்திற்கொண்டும் எதிர்க்கட்சியினர் பலர் அரசாங்கத்தை ஆதரிக்க முன்வந்துள்ளதையும் கணித்து இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த பிரதமர் சிறிமா' பண்டாரநாயக்கா முன்வரக்கூடுமென்றும் இதன்மூலம் 'ஏகஜீவமாகச் செயல' ... எதிர்க்கட்சித் தலைவரின் சவாலைப் பிரதமர் ஏற்கக்கூடுமென்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

திடீர்த் தேர்தல் நடைபெறும் பட்சத்தில் இவ்வருடம் நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் நடைபெறலாமென்றும் அல்லது 1975ம் ஆண்டு மே மாதத்தில் நடைபெறக்கூடுமென்றும் அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...ம். மாநகரசபை வெள்ளிவிழாவை முன்னிட்டு ... யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் ஆர். பண்டாரநாயக்க ... விழாவையொட்டி மகாத்மாகாந்தி வீதி-ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் திறவப்பட்ட காந்திசிலையைத் ... துவைத்து மகாத்மாவை குட்டுவதைப் படத்தில் காண்க.

## ...சைநாயகனின் மரணம் கொலை எனத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், [விய ... களில் கத்திக் குத்துக் காயங்களுக்கு ... வியாழன் நியூட்டன் ... நாயகனின் மரண ... நடத்திய மரண ... ன அதிகாரி ... தீர்ப்பளித்தார். ... பதில் நீதவான் திரு. ... சந்தேகநப ... ராஜரத்தினத் ... யுமாறு ... பிறப்பித்துள்ளனர். ... சேர்ந்த ... எல்பவர் ஒரு நாரிவிலுள்ள அவரது ஆசை நாயகியின் இல்லத்தில் கத்திக் குத்துக்கு ஆளாகி உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பின்னர் ஆஸ்பத்திரியில் மரணமானார். (உ-ந)

## ...ட்டனில் பயிலும் இலங்கை ...ளவியலாளர்

லண்டன், ஜூலை 18 ... சர்வகலாசாலை ... கொழும்பு வளாகத்தில் ... பணியா ... திரு பத்மநாதன் டி. ... பிரிட்டனில் உள ... துறையில் உயர்பயிற்சி ... வந்துள்ளார். முன்னர் திரு. டி. ... எடின்பேர்கில் உளவி... எம். ஏ. பட்டம் பெற்... ர். (ச)

## ...திய ஜனாதிபதி தேர்தல்

புதுடில்லி, ஜூன் 17 ... ய ஜனாதிபதி தேர்த... வேட்பு மனுக்கள் ... 30ம் திகதிக்கு ... சமர்ப்பிக்கப்பட ... ம் என்று ஜனாதிபதி ... அதிகாரி திரு பி. ... ர்ஜி தெரிவித்தார். ... க்குகான திகதி ... நிச்சயிக்கப்பட ... யினும் ஆகஸ்ட் 17ம் திகதி நடை... ம் என்றும் அவர் ... ......

## ...டத்தடியில் ...தற்கொலை

மீசாலை, புதன் ... மடத்தடியில் 45 ... ஒருவர் நஞ்சுத் ... அருந்தி தற்கொலை ... கொண்டார். ... கச்சேரியைச் சேர்ந்த ... தம்பி சுப்பிரமணியம் ... மரணவிசாரணை ... மேற்கண்ட விபரம் ... த்தது. ... கச்சேரி மரணவிசா ... திகாரி திரு. வி ... ஷ்ணன் தற்கொலை ... தீர்ப்புவழங்கினார். (ஸ)

## நல்லூர் ஆலயத்தில் பொலிஸ் நிலையம்

நல்லூர், புதன்

இம்மாதம் 24-ம் திகதி ஆரம்பமாகி அடுத்தமாதம் 18-ம் திகதி முடிவடைய இருக்கும் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் போது சுமார் 40 பொலிஸார் மேலதிக சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றனர்.

தற்காலிகமாக அமைக்கப்படும் இப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக திரு. வைரவப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இங்கு சேவையிலீடுபடுத்தும் ஒழுங்கு நடவடிக்கைகளை நல்லூர் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த திரு. எஸ். இராசரத்தினம் கவனித்து வருகின்றார். (ச)

## கைக்கடிகாரம் யாருடையது?

பெண்கள் கைக்கடிகாரமொன்று கந்தரோடை சட்டத்தரணி திரு செல்லத்துரையின் புதல்வர் கதிர்காமநாதனிடம் நாவலி வடக்கு சோமசுந்தரப்புலவர் வீதியில் நேற்றுக்காலை கண்டெடுக்கப்பட்டு சுழிபுர காவல்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். (த)

## கார் விபத்தில் பிரதி கல்வி மந்திரி

கொழும்பு, புதன்

பிரதி கல்வி அமைச்சர் திரு. பி. வை. துடாவை பிரயாணஞ் செய்த கார் மிகில்ல என்ற இடத்தில் விபத்துக்குள்ளானது.

திரு. துடாவையும் இக் காரில் பிரயாணஞ்செய்த அவரது மனைவியாரும் இரு சாரதிகளுடன் மாத்தறையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


**வெலிங்டன்** (வெலிங்டன்)

தினசரி 6-30, 9-30

ஞாயிறு பி. ப. 3-30

சிவாஜி-சரோஜாதேவி

**பாலும் பழமும்**

**சாந்தி** (சங்கானை)

தினசரி 6-30, இரவு 9-30

ஞாயிறு பி. ப. 2-30

எம். ஜி. ஆர்-சரோஜாதேவி

**பெற்றால்தான் பிள்ளையா?**

வி. வெ. ச. 4-15 ஞா 10-30

LOVE MACHINE

வயது வந்தவர்களுக்கு

**நாகம்ஸ்** (கன்னாதம்)

தினசரி 6-30, 9-30

ஜெமினி - அஞ்சலிதேவி

**மங்கையர் உள்ளம் மங்காத செல்வம்**

**மனோஹரா** (யாழ்ப்பாணம்)

மகத்தான 3-வது வாரம்

தினசரி 4 காட்சிகள்

ஜெய்சங்கர்

கே. ஆர். விஜயா

சுந்தரராஜன்

மனோகர்

**வாயாடி**

**ராணி** [யாழ்ப்பாணம்]

எம். ஜி. ஆர் ஜெயலலிதா

முத்துராமன் - நம்பியார்

தினசரி 4 காட்சிகள்

**ஒரு தாய் மக்கள்**

REGAL Jaffna

Daily 4-45, 7, 9-30 p.m.

Norman Wisdom

in

ON THE BEAT

**ஸ்ரீதர்** (யாழ்நகர்)

தினசரி

காலை 10-30

பி. ப. 4-45

7.00, 9.45

கதை: படை வீரர்களைப் போல் உடையணிந்த கொலைகாரர்கள்

தொழில்: எல்லாக் கொள்ளைக்கூட்டத்தையும் சாடிப்பது.

படைக்கலங்கள்! 44 பிஸ்டல்கள்

ஆனால் புகழ் வாய்ந்த வீரர் டேர்ட்டி ஹரி துணிந்து தன் பாதையிற் சென்று எல்லோரையும் வெளியேற்றுகிறார்.

கிளையின் ஈஸ்வூட் டேர்டி ஹரியாக நடிக்கும்



**மக்னம் போர்ஸ்**

MAGNUM FORCE

**2-வது ஜனத்திரள் மாதம்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - உஷா நந்தினி

நம்பியார் - முத்துராமன்

நடித்த

**பொன்னூஞ்சல்**

**வின்சர் யாழ்ப்பாணம்**

அசோக் பிக்சர்ஸ் அளிக்கும்

**வந்தாளே மகராசி**

தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6.15, 9-45

★ ஜெய்சங்கர் டி. கே. பகவதி

★ ஜெயலலிதா (இரு வேடங்களில்)

★ புஷ்பலதா ★ எம். என். ராஜம்

நடித்தது

திரைக்கதை, வசனம், டைரக்ஷன்:

இயக்குநர் திலகம்:

கே. எஸ். கோபாலகிருஷ்ணன்




**றியோ** (யாழ். நகர மண்டபம்)

தினசரி 10-30, 2-00

4-45, 7-15, 9-45

அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக் கிணங்க

25-ந் திகதிவரை மட்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்காவின் இரகசியக் காடுகள்

(கலர் - ஸ்கோப்)

பாடசாலையினர் நிர்வாகத்துடன் தொடர்புகொள்க.

**வெலிங்டன்** (யாழ்நகர்)

தினசரி

பி. ப. 2-30, மாலை 6-30

இரவு 9-30, சனி, ஞாயிறு

காலை 10-30

சிவாஜி (9 வேடங்களில்)

சாவித்திரி

நடித்த

**நவராத்திரி**

**லிடோ** (யாழ்ப்பாணம்)

ஷர்மிலா தாகூர், ராஜேந்திரகுமார்

நடித்த

தினசரி 4 காட்சிகள்

**தலாஷ் (TALASH)**

(ஈஸ்ட்மன் வர்ண சித்திரச் சித்திரம்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

